# பெண்கள் செய்திமடல்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் – 15:1, 15:2 பங்குனி, ஆனி 2013

- சுயமெல்லாம் மீட்டெடுத்து...
- சமூகத்தில் பெண்களின் பங்கு
- தொடரும் சத்திய சோதனை
- பிரச்சனை இல்லாத மனிதர்கள் இல்லை.....
- பெண்களுக்கெதிரான வன்முறை...
- மன்னாரில் இருந்து வருகை
- நீரும் வாழ்வும்
- நல்லிணக்கத்தை நோக்கிய ....
- ஒரு இலை ஒரு குசினி
- குடை தாருங்கள்

"இனிய நண்பர் இருக்கலாம். உயிரான
உறவும் ஒன்றாய் இருக்கலாம், – எனினும்
எமக்கான உணர்வும்
எமக்கான உடலும்
வெவ்வேறாகவே இருக்கும்."

ஆசிரியை



**கணவன் மீன்பிடித் தொழில் செய்தாலும் குடும்பத்தை பராமரிப்பதில்லை. குடித்துவிட்டு சண்டைபிடிப்பவன். மனைவியைச் சந்தித்தபோது..**

"இவர் எங்கள விட்டுத்துப் போறார் இல்ல. குடிகாரனோட தப்பினாலும் சந்தேகக்காரனோட வாழுறது கஸ்டம்.

முந்தி மாத வட்டி, கிழம வட்டிக்கு கடன் வாங்குவன் இப்படியே கடன் கூடி என்ர வீடுவளவு எல்லாத்தையும் வித்து கடன் கொடுக்க வேண்டியதாயித்து.

நான் தேங்காயாவாரம் முந்தி பாத்தன், இப்ப கோப்பி, கொச்சிக்காய்த்தூள் இடிச்சி விக்கன். அதோடு உடுப்பு விக்கன். ஒரு சட்டவித்தா 25 ரூபா தருவாங்க. இந்த யாவாரத்தால இப்ப கடன் இல்லாம வாழ்க்க போகுது. கஸ்டந்தான் என்றாலும் கடன் இல்ல. ஒரு 10 ரூபா என்றாலும் கையில இருக்கும். மூத்த மகன் லீவு நாளில மேசன் கூலிக்குப் போவான், கரார்ச்சிக்குப் போவான்.

## சர்வதேச பெண்கள் தினம் மார்ச் – 08

என்ர கஸ்டம் ஊருக்குத் தெரியும். சாவு வாழ்விற்குச் சொல்லாட்டியும் நான் எல்லாரோடையும் நல்லா இருக்கிறதால தங்கட வீட்டில விசேஷம் என்றா பிள்ளைகளுக்கு நல்ல சாப்பாடு என்ர வீட்டுக்கே அனுப்புவாங்க.

பிள்ளைகள் சண்டை பிடிச்சா "தகப்பனைப் போல பிள்ளைகளும்" என்பாங்க. நான் கடவுளிட்ட கேக்கிறன், ஊருக்குள்ள நானும் பிள்ளைகளும் மற்றாக்கள் மாதிரி தல நிமிந்து வாழணும் என்று. இரண்டு மகனுக்கும் பொதுவாக ஒரு சோடி செருப்பு இருக்கு. அத ரெண்டு பேரும் மாறிப் மாறிப் போடுவாங்க.

கஸ்டத்தப் பாத்திற்று மகன் கேட்டான் முழுசா தான் வேலைக்குப் போகயா என்று. இந்த வயசில பிள்ளைகள நான் வேலைக்கு அனுப்பமாட்டன் நான் கஸ்டப்பட்டு படிப்பிப்பன்".

**இவள் தனது கையிரண்டும் ஒருகாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு இன்று கடை ஒன்று நடத்தி வருபவள். பிரதேச செயலகத்திற்கு செல்லும் வழியில் நாம் இவளைச் சந்தித்தோம்.**
முந்தி நான் மற்றவர்கள் புதினம் பாக்கிறமாதிரி சத்தமா அழுவன். ஒரு பைத்தியக்காரி போலதான்.

இப்ப என்ர பிள்ளையை எனக்கான எதிர்கால மாக வைத்து வாழுறன் என்ர நோக்கம் என்ர பிள்ளையை நல்ல நிலைக்கு கொண்டு வரனும் என்ர பிள்ள ஒரு நேரமாவது நல்லாச் சாப்பிடனும்.

மற்றாக்கள் எனக்கு உடலுதவி கொஞ்சம் செய்வாங்க. கடைக்கு வருபவர்களைச் சொல்லி தேங்காய் திருவி எடுப்பன்.

**கணவன்மார் குடிக்கு அடிமையானதால் மகள்மார் வெளி நாட்டிற்கு தொழிலுக்காகச் செல்ல பேரப் பிள்ளைகளை பராமரிக்கும் வயது சென்ற பெண். இச் சிறுவர்களை பாவிக்க அலையும் சமூகத்துக் களைகள். இது விடயமாக அப் பெண்ணைச் சந்தித்தபோது...**

அப்பன்மார் இப்படி குடிச்சிப் போட்டு பிள்ளைகளையும் பொஞ்சாதியையும் கலைச்சா பிள்ளைகளுக்கு இப்படித்தான் நடக்கும்.

இவங்க சின்னப் பிள்ளைகள் இவங்களுக்குப் பாசம் வேணும். அதோட இவங்களுக்கு நிறைய ஆசை இருக்கும். ரொபிதாரன் என்று கூப்பிட்டாலும் போகுங்கள். எனக்கு இந்த வயசு போனகாலத்தில கண்ணும் தெரியாது. என்றாலும் அடிக்கடி ரோட்ட பாத்து பாத்து இருப்பன். அடிக்கடி வீட்ட பாப்பன் பிள்ளைகள் எல்லாம் இருக்கா என்டு. அதுகளிட அப்பன் குடிச்சிப்போட்டு வீடிவாங்க என்டு பிள்ளைகளை அடிக்கடி அனுப்புவான். பாவம் என்ர பிள்ளைகள் வெளிநாட்டில இருந்து கஸ்டப்படுதுகள். அதுகள் வருமட்டும் இதுகளுக்கு ஒண்டும் நடக்காம காப்பாத்திற பொறுப்பு எனக்கிருக்கு.



## சர்வதேச பெண்கள் தினத்தையொட்டி வவுணதீவு பிரதேச சபையால் நடைபெற்ற கவிதைப் போட்டியில் இருந்து....



மறவர் குலத்து
வீரப்பெண்ணே
மண்ணுக்குள் மண்ணாய்
புதைந்திடாமல் மலர்ந்து
மணம் வீசும் மரகதமே
மங்களப் பண்பாடிட எழுந்திடு

கள்ளமும் வஞ்சமும் கொண்ட சுற்றத்திலே
கண்ணியமும் வெள்ளையுள்ளமும் கொண்ட
காவியப் பெண்ணே எழுந்திடு

வண்ண வண்ண உன் சிரிப்பினிலே
வரும் வினையெல்லாம் தீர்த்திடுவாய்
வலியோரும் எளியோரும் வாழ்ந்திட
வரம் தாராய் என் பெண்ணே நீ எழுந்திடு

உன்னை விட்டு உன் முதுகில்
சொல்லால் அறையும் ஆணிகளால்
உள்ளத்தில் காயங்கள் வந்தாலும்
சோராதே பெண்ணே நீ எழுந்திடு

தாலாட்டி சீராட்டி நீ வளர்த்து
தாரை வளர்த்துக் கொடுத்த உன் சுயமெல்லாம்
மீட்டெடுத்து ஒரு கணம் உனக்காய்
வாழ்ந்திட பெண்ணே நீ எழுந்திடு.

முதலாம் இடம்
லதா நிவில் ரூபராஜ்
பட்டதாரி பயிலுனர்
அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை.

2ம் 3ம் இடத்தைப் பெற்ற கவிதைகளில் இருந்து சில பகுதிகள்.

## சமூகத்தில் பெண்களின் பங்கு

சமூகம் எனும் நான்கு எழுத்திலே
சத்தமின்றி சந்தமின்றி சகாவாக
கருத்துமிக்க கருமங்களாற்றும்
கண்ணிமைகளான பெண்களே!

கண்ணியமாய் பல விடயங்களில்
கருத்தொருமித்து ஒன்று கூடி
பேதமின்றி ஒத்தாசையாக
பெருமையாய் வழி நடத்தும் பெண்களே!

அருமை பெருமையாய்
அதிசயமிக்க துணிச்சலாய்
நிமிர்ந்து நின்று செயலாற்றி
நிம்மதி மூச்சுவிடும் பெண்களே!

பெண்ணான நீ எவ்விடத்திலும்
பெருமை தேடிக் கொடுக்கும்
சிற்பியாய் சிந்தனையாளராய்
சீர்மையுடன் சிறப்புறுகிறாய்.

**2ம் இடம்**

திருமதி. பி.மு.கமலநாதன் (ஆசிரியை)
மட் / வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்
வவுணதீவு.



## பெண் உரிமை

கல்விதனை என்றுமே
கற்றிட செய்திட வேண்டும்
அவள் கனவினை எப்போதும்
அகிலத்தில் போற்றிட வேண்டும்

உள்நாட்டில் மட்டும் அல்ல கல்வி
உன்னதமானதை வெளிநாட்டில் பெற்றிடவே
உயர்ந்த வாழ்வு வாழ்ந்திடவே

அவளுக்கு என்று ஓர் தினம்
அகிலத்தில் கிடைத்ததுவே
பயமின்றி அவள் வாழ்ந்ததாலே.

பாதுகாவல் செய்த தினமதுவே
ஆனந்தமாய் வாழவைத்த தினமதுவே
சம உரிமை கிடைத்த தினம்
சாதி மதம் இணைந்த தினம்

மார்ச் எட்டினிலே ஓர் தினமாம்
மாநிலம் போற்றும் தினமதுவே

**3ம் இடம்**

செ.அமிர்தேஸ்வரி
மட்/நாவற்காடு நாமகள் வித்தியாலயம்



ஓட்டைப் படகு
ஒடிந்த துடுப்பு
கரை சேரலாம்
கடல் போல்
நம்பிக்கை இருந்தால்.

அடங்கி விடாதே
அச்சமும், தாமதமும்
உன்னை அடைக்கும்
இரு அடைப்புக் குறிகள்

கைக் குட்டைகள்
கண்டு பிடிக்கப்பட்டது
கண்ணீர் துடைக்க அல்ல
வேர்வை துடைக்க

..................................

பா. விஜய்



தங்க காந்தி



பாபிடோல்
காந்தி
(Barbie Doll )



வெள்ளைக்
காந்தி

இறந்த பின்னும் வாழும் மனிதர்களைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளோம். சோதனைகள் சத்தியத்தை நிலைநாட்டவே. எனினும் இன்னும் சோதனைக் குள்ளாகும் மனிதராய் காந்தி வாழ்வது......

## தொடரும் சத்தியசோதனை

ஆயிரம் பேர் வந்து
ஆயிரம் சொல்லட்டும்
ஆனால்
உனக்கான உண்மைகள்
உனக்காக இருக்கட்டும்.

குடிக்க கூழ் இல்லாவிட்டாலும் இருப்பதற்கு ஒரு இடம் தேவை. உலகிற்கு எத்தனையோ நிலையான கருத்துக்களைச் சொன்ன காந்தி "இன்றிருப்பவர் நாளை இல்லை" என்பதற்கிணங்க மாற்றத்திற் குள்ளாக்கும் மானிடரால் அடிக்கடி இடம் பெயர்ந்து கொண்டே உள்ளார்.

***அடுத்து நீங்கள் எங்கோ.....***
***என்ன நிறமோ?***

---

## மாநகராம் மட்டு மா நகராம்

*மட்டக்களப்பின் வாசல்*



இது மீன் பாடும் தேனாடு
பெயரில் மட்டும் தேன்
தேன் என்றால் பூ வேண்டும்
பூ வேண்டும் என்றால் மரம் வேண்டும்.
மரம் எல்லாம் வெட்டுப்பட்டால் .....
இனி இது
**"மீன்பாடும் தேனில்லா நாடு"**



## காணாமல் போன காந்தியின் குடைக்காக.

வீதி அபிவிருத்தி எனும் பெயரில்
விருட்சங்களை வெட்டியதும் அல்லாமல்
விருட்சத்தின் நிழலில்
குடை பிடித்து நின்ற காந்தியை
கொழுத்தும் வெயிலில்
கொண்டு நிறுத்தியதும் இல்லாமல்



.........................
நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்த காந்திக்கு
இப்போது
யார் ஒரு குடை வாங்கிக் கொடுப்பார்.

றொமிலா



## எனினும் அதிகம் பேர் உயிருடன் வாழ்கிறார்கள்

பெண்களின் தற்கொலை வீதம் அதிகரித்துக் செல்வது சில கால கட்டங்களில் பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்துகின்றது.

**ஏன் பெண்கள் தற்கொலை செய்ய விளைகிறார்கள்? குடும்பத்தை பராமரித்து குடும்பச் சுமையைக் குறைக்க மிகவும் பாடுபடும் பெண்கள் குடும்பத்தை மறக்கத் துணிவது ஏன்?**

இவ்வாறான சந்தர்ப்பங்களில் வெளிச் சமூகத்திற்கு பெண்கள் என்ன சொல்ல விரும்பு கிறார்கள்?

ஒரு பெண்ணின் தற்கொலையின் பின் அல்லது தற்கொலை முயற்சியின் பின் அவள் இறப்பிற்கான காரணங்கள் ஆராய்வதிலும் அக்கறை செலுத்துவதிலும் ஏதாவது பொறிமுறை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் உள்ளதா?

தொடர்ச்சியான பெண்களின் மரணங்கள்தான் பெண்கள் தங்களுக்கு தாங்களே தேடிக் கொள்ளும் நிவாரணமா?

சிலவேளை இங்கு தரப்பட்டுள்ள கேள்விகளுக்கு தரப்பட்ட ஒழுங்கில் விடை காணமுடியாது.

சில சம்பவங்களின் ஊடாக எதையாவது கண்டுபிடிப்பது நல்லது. தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு தண்டனை அனுபவித்து தற்போது இதற்கான வழக்கிற்கு ஒவ்வொரு தவணைக்கும் சென்று வரும் ஒரு பெண்ணின் கதையிது.

இவள் பெயர் பாரு. பலருக்கு குடும்ப வைத்தியர் இருப்பது போல இவர்களுக்கும் குடும்ப நகைக்கடைக்காரர் இருந்துள்ளார். அந்த நகைக் கடையில் பரம்பரை பரம்பரையாக நகை செய்து வந்துள்ளார்கள் பாருவின் குடும்பத்தினரும். நகைக் கடையில் ஈடு வைத்தல், கடன் பெறல், அவசரத்திற்கு காசு கொடுக்காமல் நகை செய்தல் இப்படியான பல கொடுக்கல் வாங்கல்களுடன் குடும்ப உறவுகளைப் போல் பழகி வந்துள்ளார்கள். இப் பெண்ணின் திருமணத்தின் போதும் இப்படியான உறவுகள் உதவிகள் நீடித்துள்ளது. நகைக்கடைக்காரர் கணவனுக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமான நிலையில் கணவன் வெளிநாடு சென்றுள்ளார்.

இந் நிலையில் இவளது தம்பி பிரான்ஸ் போக முயற்சித்துள்ளார். இதற்கும் இந்தக் கடையில் நகைகளையெல்லாம் அடகு வைத்து தம்பியை வெளிநாடு அனுப்பியுள்ளாள். பின்னர் தம்பி வெளிநாட்டில் இருந்து காசு அனுப்ப அதை நகைக் கடையில் கட்டி வந்துள்ளாள். ஒரு நாள் நகைக் கடைக்குச் சென்ற சமயம் வழமை போல் முதலாளி கொடுத்த குளிர் பானத்தைப் பருகியவளுக்கு தலை சுற்றியுள்ளது. ஆகவே தனது காரில் கொண்டு விடுவதாக நகைக்கடைக்காரர் சொல்ல பெண்ணும் காரில் ஏறியுள்ளாள். கண்விழித்த போது ஒரு விடுதியில் உடைகள் எதுவுமற்ற நிலையில் இருப்பதை உணர்ந்தவள் நகைக் கடைக்காரனிடம் பலத்த சண்டையில் ஈடுபட்டுள்ளாள்.

அவள் மயக்கமுற்ற போது அவளுடன் பாலியல் உறவு கொண்டு தனது கைத்தொலை பேசியில் அவற்றை படமாக பிடித்துள்ளான். அப் படங்களை காட்டி மிரட்டியுள்ளான். (பெண்ணினது முகத்தை மட்டும் பதிவு செய்துள்ளான்) இதன் பின் இவனது விரட்டலானது இவளிடமிருந்து எத்தனையோ இலட்சங்களைப் பறித்தபடி தொடர்ந்துள்ளது.

தனது தங்கையின் திருமணத்திற்காய் சேர்த்து வைத்த சொத்து, நகை இவளது வீடு, வளவு, தம்பி அனுப்பிய பணம் என இவள் தூக்குப் போடும் நிலைவரை இவளை விரட்டியள்ளது.

தூக்குப் போட்ட தண்டனைக்கு மறியல். மறியலில் இருந்தே வயிறு நோக குழந்தைப் பிரசவம் மீண்டும் மறியல். பின் பிணை...

இவள் கடன் பெற்றது உண்மை. கடன் கட்டாதது குற்றம்

தூக்குப் போட்டது உண்மை. அது தண்டனைக்குரிய குற்றம்.

**ஏன் இவள் கடன் பெற்றாள், ஏன் இவள் தூக்குப் போட்டாள்**....? இவளுக்கு வக்கீல் வைக்க வக்கில்லை. ஆகவே இவளிடம் விடப்பட்டது யெஸ் நோ கேள்வியே.

இன்று குற்றவாளியாகி தனக்கேற்பட்ட அவலத்தை வெளியில் சொல்ல முடியாமல் சமூக மனப்பாங்கு களையும் விழுமியங்களையும் கட்டிக் காக்கும் கணவனால் கைவிடப்பட்ட நிலையில் இவளது கழுத்து மீண்டும் துாக்கிற்குச் செல்லாமல் இருப்பதற்கு சட்டத்தில் என்ன இடம் உள்ளது என அலசிப் பார்த்துச் சொல்ல யார் உள்ளார் ?

அல்லது.. ஒரு கட்டத்தில் கணவன் வெளிநாடு மனைவி துாக்கில் தொங்கி மரணம் எனும் செய்தியை பத்திரிகையிலும் பல இணையத்தளங் களிலும் போட எத்தனை பேர் தயார்?, அதை வாசிக்க எத்தனை பேர் தயார்?

ஏனெனில் இவளைப் போல் மற்றுமொரு பெண் ஏமாற்றப்பட்டு இதே பாணியில் பாதிக்கப்பட்டு பல இலட்சங்களை இழந்து கொண்டிருப்பதும் நடந்து கொண்டே உள்ளது....

இன்னும் அவள் இவளைப் போல் கடன் வாங்கத் தொடங்கவில்லை.

எப்பொழுதும் அது நடக்கும்.

ஆகவே மௌனித்து மரணத்தை தழுவும் பெண்களுக்கு அனுதாபம் கொள்வோமா? அறிக்கை விடுவோமா? அல்லது உயிர் வாழும் பெண்களுடன் அவர்கள் கௌரவத்துடன் வாழ வழி அமைப்போமா? நம் பெண் உறவு நம்முடன் வாழ்கிறாள். நாம் வாழும் வீட்டிற்குள் வாழ்கிறாள்.. நாம் அவளுக்காகவும் அவள் நமக்காகவும் வாழ்கிறாள் . ஆகவே முதலில் நாம் நம்முடன் வாழும் நம்மைச் சூழ வாழும் பெண்களை அணுகுவோம் பின் குரல் கொடுப்போம்.

இச் சந்தர்ப்பத்தில் சேவையாளர்கள் என செய்திகளை வெளியிடுவோரின் பங்கு முக்கியமானது. ஒரு செய்தியை வெளியிடும் போது அச் செய்தி எவ்வாறான ஒரு பயனுள்ள மறுதாக்கத்தினை தருகின்றது என்பது முக்கியம். ''பெண் தற்கொலை'' எனும் செய்தி ஏதும் பயனுள்ள மறு தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதா? ஏனெனில் ஒரே பாணியில் தற்கொலைக்குத் தூண்டுவதற்கு இச் செய்தி உதவுகின்றதோ என சிந்திக்கத் தூண்டுகிறது.

***கடன் பிரச்சனை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்படுகிறது. அச் சந்தர்ப்பத்தில் அதனை வெறும் "கடனே" எனப் பார்க்காமல் அதன் பின்னணியை ஆராய்வது பொலிஸ் பிரிவில் முக்கியம்மாகும்.***

# "பெண்களுக்கெதிரான வன்முறைகள் அற்ற வாழ்வைக் கொண்டாடுவோம்"

"இந்த கோடி மக்களுக்குள்ள ஆம்பள பொம்பிள என்று வித்தியாசம் இருக்கக் கூடாது. பெண்ணை மதிக்கணும் சிறுமி என்றாலும் சரி, வயசு போனாலும் சரி தாயாக மதிக்கணும். அவங்க எந்த இனமா இருந்தாலும் சரி மதிக்கணும்."



## நூறு கோடி மக்களின் எழுச்சி

இந்த உலகில் வாழும் பெண்களில் மூன்றில் ஒரு பெண் தனது வாழ்க்கைக் காலத்தில் அடிபடுகிறாள் அல்லது பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படு கிறாள்.

நூறுகோடி பெண்கள் வன்முறைக்குட்படுகிறார்கள் என்பது மிகவும் அக்கிரமமானது. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இல்லாத உலகம் கொண்டாடப்பட வேண்டியது. அதற்காக நாம் எழுவோம்.



பெண்கள் மீதான வன்முறைகளை நிறுத்த வேண்டும் எனக் கோரி உலகலாவிய ரீதியில் பெப்ரவரி மாதம் 14ம் திகதி நூறுகோடி மக்களின் எழுச்சி இடம் பெற்றது.

மட்டக்களப்பு அனர்த்த முகாமைத்துவ பெண்கள் கூட்டமைப்பினரும் இன்னும் பல சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து பெப்ரவரி 14 ம் திகதி 12.30 மணியிலிருந்து 2.30 மணிவரை மட்டக்களப்பு திருகோணமலை வீதியின் பார் வீதியை மையமாக வைத்து மனிதச் சங்கிலியை உருவாக்கினர். இதன் போது நிகழ்வில் பங்கு பற்றிய பெண்களிடமிருந்தது....

"எங்கபோனாலும் வெற்றிதான் அதுதான் எங்கட பெயர்கள்." - இவர்கள் காயங்கேணியைச் சேர்ந்தவர்கள். 55, 57 என தங்கள் வயதைக் கூறினார்கள். இந் நிகழ்வில் பங்கு பற்றிய தங்கள் எதிர்பார்ப்புப் பற்றி பின்வருமாறு தெரிவித்தனர்.

- "ஆஸ்பத்திரிக்கு போனாலும் பஸ் ஸ்டாண்டுக்கு போனாலும் சரி பெண்கள் விசயம் கேவலமாகப் போகக் கூடாது. நாங்க முன்னேறினா மட்டும் போதாது சமுதாயமும் முன்னேற வேண்டும். அதுதான் இப்பத்தேய கோரிக்கை."

- "பொம்பிளயளுக்கு நக்கலடிக்கக் கூடாது. வயது போன பொம்பிளயளுக்கு நக்கலடிக்கிற பழக்கம் இருக்கக் கூடாது."

# மன்னாரில் இருந்து வருகை தந்த பெண்களிடமிருந்து...

**எங்களது கதைகளை மற்றவர்களுக்குச் சொல்லும் போது, பழசையெல்லாம் மறந்திற்று புதிய வாழ்க்கையை தொடருங்க என்று சொல்றாங்க. ஆனா இதில எந்தக் கதையை நாங்க விடுற எந்தக் கதையை மறக்கிற.. இப்ப காணாமப் போன எங்கட மகனையா, 28 வருசத்துக்கு முந்தி காணாமப் போன புருசனையா, அண்ணனையா, தம்பியையா..... மற்றய உறவுகளையா இதில எத? எந்தக் கதைய....**

இவர்கள் சேவா அமைப்பினரின் எற்பாட்டில் மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்தனர். இவர்கள் நிறுவனங்களில் பணி புரிபவர்கள் எனவும் சங்கத் தலைவிகள் எனவும் பல்வேறு மட்டத்திலிருந்து வருகை தந்திருந்தாலும் இவர்கள் அனைவரும் யுத்தத்தின் கோரப்பிடியினால் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப் பட்டிருந்தனர்.

நாம் உறவுகளை இழந்த பெண்களைச் சந்தித்த போது...

இப் பெண்களது உறவுகள் யுத்தத்தின் போது காணாமல் போயுள்ளனர். இப் பெண்கள் சிறுகடை வைத்தும், பாடசாலைகளில் சமையல் வேலைகள் செய்தும், தோட்டம் செய்தும், மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டும் தமது குடும்பத்தைப் பராமரித்து வருகின்றனர். இதில் ஒரு பெண் கூறுகையில் தன் மகன் தான் படும் துயரத்தைப் பார்த்து பாடசாலைக்குச் செல்லாது வேலைக்குச் செல்கிறார் எனவும் இது மிகவும் கவலையளிக்கிறது என்றார்.

மற்றுமொரு பெண் கூறுகையில்- சூழல் அபிவிருத்தி என்ற பெயரில் சமூகம் அபிவிருத்தியடைந்து வருகிறது. பாடசாலை, வைத்தியசாலை, போக்குவரத்து வசதி, பிரதேச செயலகம், நூலகம் போன்றவை கட்டப்பட்டாலும் எங்களுடைய வீடுகள் இன்னும் புணரமைக்கப்பட வேண்டியே உள்ளது.

மற்றுமொரு பெண் கூறுகையில் - எங்களது கதைகளை மற்றவர்களுக்குச் சொல்லும் போது, பழசையெல்லாம் மறந்திற்று புதிய வாழ்க்கையை தொடருங்க என்று சொல்றாங்க. ஆனா இதில எந்தக் கதையை நாங்க விடுற எந்தக் கதையை மறக்கிற.. இப்ப காணாமப் போன எங்கட மகனையா, 28 வருசத்துக்கு முந்தி காணாமப் போன புருசனையா, அண்ணனையா, தம்பியையா..... மற்றய உறவுகளையா இதில எத? எந்தக் கதைய.... (மௌனம்) (மௌனத்தின் பின்..) நாங்களும் எங்களுடைய குடும்பத்தை நிலை நாட்ட வேணும் என்று நினைத்து முயற்சி செய்தமென்றாலும் மனம் சோர்வடைந்து பழைய நினைவுகள் தலை தூக்குமென்றால் எங்களால் அதற்கு மேல் ஒரு அடியேனும் நகர்த்த முடியாது.....

எங்களுடைய கிராம அமைப்பானது யுத்தத்தின் பின் புனரமைக்கப்பட்டு காணப்பட்டாலும் இன்னும் கட்டுப்பாடு மிகவும் அதிகமாகவே காணப்படுகிறது. சுதந்திரமாக எதையும் கதைக்க முடியாது, ஒன்றுசேர முடியாது, இவ்வாறான ஒரு வலைக்குள்ளேயே நாங்கள் காணப்படுகிறோம்;.......ஆனா இப்படி வந்து போறது... எங்கட கதையை நீங்க கேக்கிறது சரியான ஆறுதலாக இருக்கு.





# நீரும் வாழ்வும்

**இயற்கை விரும்பிகள் இன்னும் இருப்பதனாலேயே ஒரு துளி நீராவது என்றும் இருக்கும் என்பது நிச்சயம்.**

மட்டக்களப்பு வாவியில் றால் பிடிக்கும் காலம் தொடங்கி விட்டால் வாவியை அண்டியிருப்போர் எல்லோருக்கும் ஒரே சந்தோசம்தான். தோணியில் வந்து றால் பிடிப்போர், நீருக்குள் இடுப்பளவு நின்று வலை வீசிப் பிடிப்போர், கொத்துக் கட்டிப் பிடிப்போர், ஓலை வளைத்துப் பிடிப்போர், காலால் மிதிச்சு றால் எடுப்போர் (இதில் பெண்கள் அதிகம்) என்று ஆற்றுக்குள் திருவிழாவாக இருக்கும். இரவில் வெளிச்சங்கள் வரிசையாகத் தெரியும் அழகு, காலையில் கரையில் காத்து நிற்கும் வியாபாரிகள், றால் பிடிப்போரிடமிருந்து நேரடியாக 'உயிர் றால்' வாங்க நிற்கும் சனங்கள் என ஆற்றங்கரை அழகாக இருக்கும்.




வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்காக பெரிய மோட்டார் படகுகள் விடுவதும் சில சமயம் 'சீபிளேன்' வந்து இறங்குவதும் எதிர்கால அபிவிருத்தித் திட்டத்தால் நடைமுறையாகினால் வாவிக்குள் நடக்கும் இறால் திருவிழா இல்லாமல் போய் விடுமா? சீபிளேனினும், மோட்டார் படகுகளிலும் இருந்து வெளியாகும் இரசாயனக் கழிவுகள் பாதிப்பை ஏற்படுத்துமா என்பது இப்போதுள்ள கேள்வி.


## காயம் பட்ட மரத்திற்கு....?


வீதி பெருப்பிப்பதற்காய் பல்லாண்டுகாலம் வாழ்வோடு ஒன்றியிருந்த மரங்கள் வெட்டியெறியப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. அந்தவகையில் 2009ம் ஆண்டு மட்டக்களப்பின் திருகோணமலை வீதியில் மரணத்தின் வாசலில் காத்திருந்த மரமொன்றின் ஆறுதல் அஞ்சலி நிகழ்விலும் இறக்கப் போகும் மரத்தின் நினைவாக இடம் பெற்ற புதிய மரக்கன்று நடுகை நிகழ்விலும் கலந்து திரும்பியபோது மனம் கனத்துக் கிடந்தது.

இரு வாரங்களுக்கு முன் படுவாங்கரை தரிசனத்திற்காய் கலர் கலர் வண்ணத்தில் உச்சிவெயிலில் அமைக்கப்பட்டிருந்த கதிரைகளைப் பார்வையிடச் சென்றபோது அதன் அருகே இறந்துபோன மரத்தின் எச்சங்களை கண்ணுற்று "சரி நாட்டப்பட்ட கண்றுக்கு என்ன நடந்திருக்கும்" என நட்ட இடத்தில் தேடியபோது அவ் விடத்தின் கராஜ் உரிமையாளர் கை உடைந்து வாடிக் கிடந்த ஒருமரத்தை காட்டியபடி தன் ஏக்கத்தை பகிர்ந்து கொண்டார்.


"இந்த மரத்த என்ர பிள்ளைகளும் சேர்ந்துதான் நாட்டினவங்க. அதுபேப்பரில வந்தது. அதன் கட்டிங் வைச்சிருக்கன். கான் வெட்டும்போது மரத்த காப்பாத்த அப்படியே தோண்டி எடுத்தம். பிறகு கொஞ்சம் தள்ளி நாட்டினம். எங்க போனாலும் ஞாபகமா மரம் நிக்கனும். நாங்க வாழ்ந்த ஊரான ஒல்லிக்குளத்திலயும் ஞாபகமா ஒரு மரம் வைச்சம்."

மரம் நமக்கு நிழல் தாறதோட நாம் வாழ்ற இடத்தின் அடையாளத்திற்கும் உதவுது. ஜாம் மரத்தடி..., வாகைமரத்தடி...., புளியமரத்தடி... என்று. நான் வெட்டப்பட்ட அந்த மரத்தில ஒருதுண்ட எடுத்து வைச்சிருக்கன் அதன் நினைவாக ஸ்டூள் செய்ய" மரத்தின் பக்கத்தில் நின்றபடி கூறிக்கொண்டே சென்ற அந்த இயற்கை ஆர்வலரின் பேச்சினூடே "இங்க மரங்கள் அதிகம் இருப்பதால காகங்கள் அதிகம் வருது" எனக் கூறிய அறிவு ஜீவியின் குரல் ஞாபகத்தில் கீறலிட காயப்பட்ட மரத்தின் வடுவைத் தடவி ஆறுதல் படுத்திவிட்டு அவ்விடத்தை விட்டு நகர்கிறோம்.





# நல்லிணக்கத்தை நோக்கிய திரைப்பட சித்தரிப்புக்கள் – சர்வதேச திரைப்பட விழா



நல்லிணக்கத்தை நோக்கிய சர்வதேச திரைப்பட நிகழ்வானது 18, 19. 01.2013 காலப் பகுதிகளில் மட்டக்களப்பு சார்ள்ஸ் மண்டபத்தில் இடம் பெற்றது.

இத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்ட ஆவணப்படங்கள்:-

**பிரிவுகளாக ஈராக்** - போரினால் பாதிக்கப்படும் நாடுகளிலும், யுத்தகாலப் பகுதியில் வாழும் வெவ்வேறு இன மக்களினதும் மனவோட்டங்களை இத் திரைப்படம் சித்தரிக்கிறது. சுன்னி, ஷியர், குர்தீஸ் ஆகிய மக்களின் பார்வையினூடு இத் திரைப்படம் நகர்கிறது.

**பிசாசு மீண்டும் நகரம் செல்ல பிராத்தியுங்கள்.** - மக்களை மிகவும் பாதித்துக் கொண்டிருக்கும் கொடிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர லைபீரியப் பெண்கள் முன்நின்று போராடுவதை, சமாதானம், அன்பு என்பதே நாட்டின் உயிர்நாடி என ஒருமித்து குரல் கொடுப்பதை, யுத்தத்தை நிறுத்தும் பெண்களின் சக்தியை இத் திரைப்படம் சித்தரிக்கின்றது.


**மண்ணெண்ணை**. போராட்ட காலங்களில் மாற்று வளங்களின் பயன்பாடு, மக்களது மனிதாபிமானச் செயற்பாடுகளை சித்தரிக்கின்றது இத் திரைப்படம்.

**ஒருமைப்பாட்டுக்கான சாத்தியம்** - காலத்திற்குக் காலம் மனிதனால் ஏற்படுத்தப்படும் சாதி, பேதங்கள், மதச் சண்டைகள், இன வெறிகள் இவை நிரந்தரமானவை அல்ல. அபிவிருத்தி, சமுதாய வளர்ச்சி, உரிமைகளை வென்றெடுக்கும் சாத்தியம் அனைத்திற்கும் அடிப்படையாய் இருப்பது மானிட ஒற்றுமை, மானிட ஒத்துழைப்பு என்பதை இத் திரைப்படம் சித்தரிக்கின்றது.

**ஜெனரல் பட்நேகட்டின் மீட்சி**
பயங்கர யுத்தத்தில் ஈடுபட்டு பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைக் கொன்று குவித்த ஒரு ஜெனரல் தனது யுத்தத்தைக் கைவிட்டு மன்னிப்புக் கேட்பதற்காக மக்களிடம் வருவதையும் மன்னிக்கும் மனதின் வல்லமையையும் இப் படம் சித்தரிக்கிறது.

**இராஜேஸ்வரி**– சாதாரண ஒரு பெண்ணின் வாழ்வில் யுத்தமானது யுத்த காலத்தின் போதும் அதன் பின்பும் எவ்வாறு பாதிப்புக்களை ஏற்படுத்துகிறது என்பதை இத் திரைப்படம் சித்தரிக்கிறது.

**மக்களின் எதிரிகள்** - கொலைகளையும் பாரிய அழிவுகளையும் உட்கொண்ட பூமி குறிப்பிட்ட ஆக்கிரமிப்பின் பின் மௌனித்துக் கிடக்குமானால் அது சீழ் உள்ள காயம் தோலால் மூடியது போலாகும். மரணத்தின் வடுக்கள் மறைய வேண்டுமானால் உண்மை தெரிய வேண்டுமானால் மரணத்தின் சாட்சியாய் வாழும் மனிதர்கள் பேசும் வெளி ஒன்று உருவாக வேண்டும். கொலைகாரர்கள் தங்கள் கொலைகளைப் பற்றிப் பேசுவதன் ஊடாக நல்லிணக் கத்தை கொண்டு வருவது இத் திரைப்படத்தின் சிறப்பு.



- **ஏற்க மறுக்கும் கலை** - எதற்காக மனிதர்கள் கட்டிப் புரண்டு வெட்டிக் கொல்கிறார் களோ அதுவே பல தருணங்களில் இணைப்பிற்கான ஊடகமாகவும் அமைகிறது. "மொழி" எவ்வாறு சமாதான இணைப்பிற்கு பங்கு வகிக்கின்றது எனும் வெளிப்பாடாய் இத் திரைப்படம் அமைகிறது.

- **நேருக்குநேர்** - ஓர் குற்றவாளி, காயப்பட்ட மகன், பிரிவுற்ற தாய், சமாதானமான சமூகத்தைக்கான வன்முறைகளை நிறுத்த எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பதை இத் திரைப்படம் விளக்குகின்றது.

- **அமைதியைத்தேடி**– விருந்தும் மருந்தும் 3 நாட்கள் என்பர். இந்த வகையில் நினைத்தும் பாத்திராத இடம் பெயர்வுகள், இடம் பெயரும் மக்களை ஆதரிக்கும் அயலூர்கள், எனினும் காலம் செல்லச் செல்ல வந்தவர்கள் மீது காட்டும்

உதாசீனம். இதனால் சொந்த இடத்து கௌரவமும் இன்றி வந்த இடத்தில் உரிமையுமின்றி மக்கள் படும் துயரத்தை இத் திரைப்படம் சித்தரிக்கிறது.

- **பல உண்மைகள்-** மதத்தின் பெயரால் மதம் கொண்டு அழிப்பவர்கள் மத்தியில் மதக் கோட்பாடுகளின் புனிதத் தன்மை மூலம் மக்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்த மதத் தலைவர்கள் எடுக்கும் முயற்சியே இத் திரைப்படத்தின் சித்தரிப்பு.

*பார்வையாளர்கள் கருத்தாக*

❖ இவ்வாறான ஒரு சர்வதேச திரைப்பட விழா மட்டக்களப்பில் நடைபெறுவது வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

❖ இங்கு காண்பிக்கப்பட்ட மூன்று ஆவணப் படங்களும் சிறந்த முறையில் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. இத் திரைப்படங்கள் சமாதானக் கட்டமைப்பு, ஆயுத வன்முறைகளைக் களைதல் ஆகிய கோட்பாடுகளைக் கொண்டுள்ளன. இதில் சமாதானத்தைக் கொண்டு வருதலில் பெண்களின் பங்கு முக்கிய இடம் வகிக்கின்றது.

❖ மண்ணெண்ணை ஆவணப்படமானது அனைவராலும் மிகவும் ஆர்வமாகவும், விருப்பத் தோடும் பார்க்கப்பட்டது. இதே போல் இன்னும் அதிகமான ஆவணப்படங்கள் மட்டக்களப்பில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். சர்வதேச திரைப்படங்கள் மட்டுமன்றி உள்ளூரிலும் மேற் கொள்ளப்படுகின்ற ஆவணப்படங்கள் தயாரிப்பவர்கள் பாராட்டப்பட்டு ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

❖ இவ் ஆவணப்படங்கள் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டிருந்தாலும் அதிகமாக வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதுபோல் காட்சிகளுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருந்தால் படித்தவர் மத்தியில் காணப்படுகின்ற வரவேற்பு போன்று பாமரர்கள் மத்தியிலும் வரவேற் கப்படுவதோடு அவர்களையும் இவ் ஆவணப்படங்கள் சென்றடையும்.



❖ அரசியல் தொடக்கம் ஏனைய தீர்மானம் எடுத்தலில் பெண்களின் கருத்துக்கள் கேட்கப்படுதல் மிகவும் குறைவு.

❖ அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் ஆண்களுடைய பாரம்பரியம் ஆண் ஆதிக்க சிந்தனைகளுக் கூடாகத்தான் அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. பல சந்தர்ப்பங்களில் ஆணாதிக்க சிந்தனை பழிவாங்குகின்ற மனோபாவத்தை ஏற்படுத்துகின்றது.

❖ எமக்கு துரோகம் செய்தவர்களை பழிவாங்குவது எம் மத்தியில் மிகவும் அழுத்தமாக காணப்படுகின்றது. இந்த மனோபாவங்களுக்கு பெண்கள் உட்படாமல் எவ்வாறு தங்கள் கடமைகளை செய்கிறார்கள் என்பதை இவ் ஆவணப்படம் விளக்குகின்றது.

❖ நல்லிணக்கம் தொடர்பாக நாம் பேச வேண்டு மானால் சமூக பொறுப்பிலுள்ள தமிழ், முஸ்லிம், சிங்களப் பெண்கள் என்ன கதைக்கின்றார்கள், என்ன செய்கின்றார்கள், அவர்கள் பார்க்கின்ற விதம், அவர்கள் பார்க்கின்ற இலக்குகளின் எல்லைகள், அவர்கள் பார்க்கின்ற இன அடையாளங்கள் என்ன என்பது பற்றி நாங்களும் பேச வேண்டும் பார்வையிட வேண்டும். அவர்களுடன் உரையாடலை மேற் கொள்ள வேண்டும். பெண்ணிலை வாதச் சிந்தனையை முரன்பாடுகளைத் தீர்க்க பயன்படுத்த வேண்டும்.

❖ பெண்களால் அனைத்தையும் சாதிக்க முடியும். பெரிய பிரச்சனையை கூட பெண்களால் முடிவுக்கு கொண்டு வரமுடியும் என்பதை வெளிப்படுத்துகின்றது.

❖ பிரச்சனைகளுக்கும் மத்தியில் மக்களின் நலனுக்காக தனது உயிரையும் பொருட்படுத்தாது வேலை செய்யும் வாடகைக்கார் சாரதி, இக்கட்டான கால கட்டங்களிலும் உன்னத மனிதர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சியடையக் கூடிய ஒரு விடயமாகும்.

*ஒருங்கிணைப்பாளர் ICES மற்றும் OVP அமைப்பினர். இணை அனுசரனை EHED, BUTTERFLY PEACE GARDEN, SURIYA-*

# ஒரு இலை ஒரு குசினி

பறவைகளுக்கு வீடு
படகோட்டிக்குத் துடுப்பு
வழிப்போக்கருக்கு நிழல்

சிறுவர்களுக்கு ஊஞ்சல்
சிறு கோயில்களுக்கு குடை

மழையில் நனைபவருக்கும் குடை
**வெய்யிலில் விற்பவருக்கும் குடை**

வீதியின் புகைக்கு வடிகட்டி
கிணற்றுத் தண்ணீருக்குப் பாத்திரம்

பக்கத்து தோட்டங்களுக்கு பசளை
நோயாளிகளுக்கு கை மருந்து
வைத்தியருக்கு பட்டையும் சாறும்


ஊர்களுக்கு அடையாளம்
புலவருக்குப் பாட்டு



## நெருப்பு வாகையின் நெஞ்சில் இட்ட நெருப்பு

பிள்ளையை பெத்தா கண்ணீரு !
தென்னய வெச்சா இளநீரு !
மானிடரே
சிந்தியுங்கள்?
பெத்த பிள்ளைகள்
கொடியவனாக இருந்தாலும்
அவனை
வாழ வைக்கும்
நீங்கள்,
ஏன்?
பலனை
மட்டுமே தரும் எங்களை!
வேரோடு
பிடுங்கி உயிரோடு
சாகடிக்கின்றீர்கள்?
விறகாகி நெருப்பிலே வேகும்
எங்களின் நெஞ்சு
எரிகிறதே !

றொமிலா



மட்டக்களப்பு மாநாகரசபைக்கு உட்பட்ட வீதியோரங்களிலும் காணிகளிலும் உள்ள பாதுகாக்கப்பட்ட மரங்களை வெட்டுவது தொடர்பாக அனைவருக்கும் தெளிவுபடுத்த வேண்டியது அவசியமாகும்.

Aதரம் Bதரம் - வீதியோரங்களில் நிழலுக்காக நடப்பட்ட மரங்களை வெட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாத்திரமே அதிகாரம் உண்டு. அதுவும் மாநகரசபையின் அனுமதியுடன் மின்சார சபை, பிரதேச செயலகத்துக்கும் அறிவிக்க வேண்டும்.

மரங்கள் வெட்டுவதற்குரிய சரியான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும். வீதிகளை புனரமைத்தல், விரிவுபடுத்தல் என்பனவற்றுக்காகவும், மின் இணைப்புகள், வடிகான்களுக்கும் பாதிப்பு ஏற்படும் பட்சத்திலுமே வெட்டமுடியும். மற்றும் கிளை வீதிகளில் உள்ள மரங்களை வெட்டுவதற்கு மாநகரசபைக்கும், மின்சாரசபைக்கும் சரியான காரணங்களுடன் அனுமதியளிக்கப்படும். இவையனைத்தும் பிரதேச செயலகத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

மற்றும் தனி நபர்களுடைய காணிகளில் உள்ள பாதுகாக்கப்பட்ட மரங்களான, வேம்பு, தென்னை, பனை, பலா, ஈரப்பலா, போன்ற வற்றுக்கு கட்டாயம் அனுமதி பெறவேண்டும். இதனை பிரதேச செயலகத்திலும் தெங்கு அபிவிருத்தி சபையிலும் பெற்றுக் கொள்ளலாம்.

**தண்டனைக்குரிய குற்றம்:-**
இவ்வாறு அனுமதி பெறாமல் மரங்கள் வெட்டப்படும் போது பிடிபட்டால் மரங்களின் வகையை பொறுத்து அபராதம், தண்டனை என சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
அனுமதிபெறாமல் வெட்டப்படுவதை அவதானித் தால் எந்தவொரு தனிநபரும் கிராம சேவகளுக் கோ அல்லது பிரதேச செயலகத்துக்கோ அறிவிக்க முடியும்.

வேணுசிறி
(மின்மினிசெய்திகளுக்காக)



## குடை தாருங்கள்

உச்சி வெயிலில்
கண்கள் கூச
குந்தியிருப்போர் - மாலை வரும்
அஸ்தமனங்களின் அழகு தேட.

இயற்கையை மதிக்காதோர்
விடும் மூச்சுக் காற்றினாலேயே
ஆகாய மண்டலம்
விஷமாகி வருகிறது.



மனிதச் சவங்களுடன்
மரத்தின் சவங்களும் போட்டியிட்டால்
மனிதனே வாழ்வோ சாவோ
மண்ணிற்கு எங்கே செல்வாய்

சீனாவிலும் யப்பானிலும் மக்கள் சுவாசிக்கும் காற்று மாசடைந்து விட்டது என்கிறார்கள். இதனால் மக்கள் காற்றைச் சுத்திகரிக்கும் இயந்திரத்தை வாங்கி வீடுகளில் பயன்படுத்துகிறார்கள். அது மாத்திரமல்லாமல் ஒட்சிசன் சுவாசிக்கும் இடங்களும் உள்ளன. இவற்றை தேவைப்பட்டபோது மக்கள் பாவிப்பார்கள். காற்று அசுத்தமாகும் போது மரங்கள் அதனை வடிகட்டுகின்றன. சுத்திகரிக்கின்றன. இது பாடசாலையில் சிறுவயதில் படிப்பது. பள்ளியில் படிக்கா தோருக்கோ மரங்களின் மகத்துவம் தெரியும். வெப்ப வலயத்தன்மையுள்ள எமது நாட்டில் மரமும் நிழலும் மனிதருக்கு உயிர் போன்றவை, வேகாத வெயிலில் நின்று இளைப்பாற மரநிழல் தேவை, சிறுவியாபாரிகள் ஆண்களும் பெண்களும் மரநிழலை கட்டாத கடையாகப் பாவிப்பதை இன்று பல இடங்களில் காண்கிறோம்.

மத்தியான நிழலில் மக்கள் நின்று இளைப்பாற நிழல் கொடுத்த மருத மரமொன்றை வெட்டியவர் மீது மண்டூரைச் சேர்ந்த மொட்டை வேலாப் போடியார் என்ற புலவர் ஒரு அறம் பாடினார்.

"முத்தர் பாண்டியர் மூவர் இருக்கிற
மத்தியான மருத நிழல் தன்னை
கத்தி கொண்டு கந்தற வெட்டினான்
சத்தி வேலவர் தலையற வெட்டுவாய்."

இன்று மரம் வெட்டுவோர் மீது நிழலை அண்டிப் பிழைக்கும் ஏழை மக்களும் ஏயார் கொண்டிசன் வாகனத்தில் போக வக்கற்ற பாதசாரிகளும் இப்படித்தான் மனதுள் அறம் பாடுவார்களோ?


### முன் கூட்டியே பதிவு செய்ய இன்றே முந்துங்கள்



நாம் சுவாசிக்கும் வெளிநாட்டுக் காற்றின் வரி உயர்வில் இருந்து பாதுகாக்க உள்ளூர் வாசிகளுக்காய் குறைந்தளவு சுவாசிக்கும் மெசின் கண்டுபிடிப்பு (ஒரு வருட ஆயுசுக் காலத்திற்கு உத்தரவாதம் வழங்கப்படும்)



சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,
இல.55, லேடி மன்னிங் டிறைவ்,
மட்டக்களப்பு.
தொ. பேசி :065 222 3297

முகவரி :..........................................
..................................................
..................................................
..................................................